ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2491/35 - 2026 ජූනි මස 03 වැනි බදාදා - 2026.06.03

2491/35 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல.: ஜா/2/2/1/பே.பு.மார் 15/2.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவில், ராகம் பத்துவ சிறு பிரிவில், 192 துடல்ல மேற்கு கிராம அலுவலர் பிரிவில், கனுவன என்ற கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகம் சார்பில் கம்பஹா சிரேஷ்ட நில அளவையாளர் அவர்களால் தயாரிக்கப் பட்டுள்ள 512201 என்ற இலக்கத்தையுடைய கடஸ்திரல் காணி வரைபடத்தில் வலயம் இல. 01 இல் பத்திர இல. 02 என அடையாளப்படுத்தப் பட்டுள்ள 0.0167 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட கீழ்க் குறிப்பிடப்படும் காணித்துண்டு.

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: செக்குவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தர கட்டிடமொன்றின் ஒரு பகுதி மற்றும் தற்காலிக கட்டிடங்கள் 2 இன் பகுதிகள் உள்ளன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஜா-எல கப்புவத்தை, கொழும்பு வீதி, இல. 555 இல் வசிக்கும் E. A. D. மாலனி வினப்பிரீடா; விஸ்தீரணம்: 0.0167 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஜா-எல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம். நிலங்கா குணவர்தன,
பிரதேச செயலாளர் (பதில் கடமை),
ஜா-எல.

பிரதேச செயலகம்,
ஜா-எல,
2026, மே 27

EOG 06 - 0009